# மதுராவல பிரதேச சபை
# களுத்துறை மாவட்டம்

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதுராவல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 27,039 பெறுமதியான 03 தண்ணீர் தாங்கிகள் மற்றும் ரூபா 252,554 பெறுமதியான உள்ளகத் தொலைபேசி முறைமை என்பவற்றுக்காக செலவிடப்பட்ட தொகை மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 279,593 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 247,152 ஆக இருந்த போதிலும், ரூபா 214,915 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 32,237 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சிறுவர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கடன்கொடுத்தோராக ரூபா 1,925,077 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1,262,037 தொகை மாத்திரம் மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 663,040 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் நார்த்துபான வாராந்த சந்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 3,986,481 தொகையான செலவினம் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக காணி, கட்டிடங்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்துது.

(உ) கூட்டுப்பசளைத் தளத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,919,489 தொகையான செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் மூலதனச் செலவினம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 174,124 தொகையான செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மூலதனச் செலவினம் ரூபா 174,124 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) புளத்சிங்ஹள பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 221,804 தொகை நடைமுறைப்பொறுப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2017 இன் நிதிக்கூற்றுக்களில் மதுராவல பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 331,130 தொகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2006 ஆம் ஆண்டில் புளத்சிங்ஹள மற்றும் மதுராவல சொத்துக்கள் பகிரப்பட்டதன் பிரகாரம் மதுராவல பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 3,453,309 ஆக இருந்ததாக தலைவரின் 2018 யூலை 17 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புளத்சிங்ஹள பிரதேச சபையிலிருந்து ஒரு பகுதி 2006 ஏப்ரல் 15 ஆந் திகதி மதுராவல பிரதேச சபையாக பிரித்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த சந்தர்ப்பத்தின் போது சபைக்கு உரித்தாக வேண்டிய சொத்துக்களும் பொறுப்புக்களும் 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

முறையாகப் பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் உரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 83,883,306 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ / ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவது அசையாத ஆதனம் அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | | அசையும் ஆதனம் தொடர்பாக வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதிக்கட்டமாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 73,229,868 | சபைக்குச் சொந்தமான சகல காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(3)(4) | - | சபையின் டபள்கப் வண்டியொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆதனவரிக்கு கீழான ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,937,048 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,632,480 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,241,650 | 1,017,903 | 835,226 | 360,549 | 1,495,960 | 588,408 | 439,695 | 764,547 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 325,850 | 1,103,332 | 956,665 | 146,666 | 307,220 | 664,160 | 664,160 | - |
| ஏனைய வருமானம் | 10,836,200 | 10,000,000 | - | 17,255,583 | 9,600,200 | 8,500,000 | - | 9,273,514 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**(அ) வீதவரியும் வரியும்**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 543,217 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது நிலுவையில் ரூபா 369,049 தொகை அதாவது 68 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 539,992 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அதில் ரூபா 504,452 தொகை அதாவது 93 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 209,708 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 174,168 தொகையும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 161 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 11,439 ஆக இருந்ததுடன் வருடாந்த சிட்டையிடல் ரூபா 13,998 ஆகக் காணப்பட்டது. ஆண்டின் போது ரூபா 19,349 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிலுவை மீதி ரூபா 4,212 ஆகும்.

**(இ) நீர் வரி**

மீளாய்வாண்டின் நீர் வரி வருமானமாக ரூபா 463,911 தொகை சிட்டையிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 317,245 தொகை அதாவது 68 சதவீத அளவு அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 146,666 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

கைத்தொழில் வரி / வியாபார வரி / வியாபார அனுமதிப்பத்திர வருமானம் என்பவற்றை அறவிடுவதற்காக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் பிரகாரம் சிட்டையிடப்பட்டு உரிய நபர்களிடமிருந்து வரித்தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், வரித்தொகையாக கிடைக்கின்ற வருமானம் ஆண்டின் சிட்டையிடலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

**(அ) நீதிமன்றத் தண்டப்பணம்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,397,583 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதியில் ஆண்டின் போது எத்தொகையும் கிடைத்திருக்கவில்லை. ஆண்டின் போது நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 500,000 தொகை சிட்டையிடப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,897,583 ஆகும். மேலும், ஒவ்வொரு வருடமும் நீதிமன்றத் தண்டப்பணம் மிகையாகச் சிட்டையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 4,875,932 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் முன்னைய ஆண்டுக்குரிய குறைவான சிட்டையிடலாக ரூபா 6,082,043 தொகை ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா 8,099,975 தொகை கிடைத்திருந்ததுடன் ஆண்டிற்குரிய சிட்டையிடல் ரூபா 9,500,000 ஆகும். அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 12,358,000 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 12 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உபவிதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற வேண்டிய 02 இலக்குகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பெறுகை நடவடிக்கைகள்**

தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2015, 2016, மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,533,900, ரூபா 1,504,053 மற்றும் ரூபா 1,863,094 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன், கழிவுப்பொருட்களுக்காக கூட்டுப்பசளைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருட்கள் சேகரித்தல் இரண்டு வலயங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வலயத்தில் கழிவுப்பொருள் வரி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்களிலிருந்து கழிவுப்பொருள் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்தல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**(அ) பிரதேச சபையைக் கூட்டிணைத்தல்**

2006 ஏப்ரல் 15 ஆந் திகதி முதல் பிரதேச சபை தாபிக்கப்பட்டு முன்னாள் புளத்சிங்ஹள பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன புளத்சிங்ஹள மற்றும் மதுரவல பிரதேச சபைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 05 கணக்காய்வு திகதி வரையிலும் அந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் சட்டரீதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. மதுராவல பிரதேச சபையின் ஆரம்பத்தின் போது தற்போது காணப்படுகின்ற சபை காணி மற்றும் கட்டிடங்களை உள்ளடக்கிய மயான நிலங்கள், ஏனைய காணிகள் மற்றும் கட்டிடங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிடங்கள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மின் உபகரணங்களைப் பொருத்துதல்**

(i) மின்சாரப் பிரிவினால் வீதி விளக்கு தூண்களுக்காக மின்குமிழ்களைப் பொருத்தும் போது நாளாந்தம் பொருத்தப்பட்ட மின்குமிழ் தொடர்பான குறிப்புப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படாமையின் காரணமாக களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட மின்குமிழில் எவ்வளவு பொருத்தப்பட்டுள்ளது எனவும், மிகுதி எவ்வளவு எனவும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) தூண்களிலிருந்து கழற்றப்பட்ட உத்தரவாதத்துடன் கூடிய மற்றும் உத்தரவாதமற்ற மின்குமிழ்கள் மின் தொழில்நுட்பவியலாளரால் களஞ்சியத்திற்கு கையளிக்கும் போது பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அதனால் உத்தரவாதக் காலத்தை விஞ்சியிருக்காத

மின்குமிழ்களுக்காக வேறு மின்குமிழ்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியாதிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) வெற்றிடமும் மிகையும்**

(i) வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியின் வேலை மேவுகைக்காக முகாமைத்துவ உதவியாளர் தரம் I இன் பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ii) ஆரம்ப மட்டத்தில் 04 ஊழியர்கள் மிகையாக இருக்கும் போது அமைய மற்றும் சமயோசித அடிப்படையில் 09 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த மற்றும் சிறையிலிடப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலமாக அறவிடப்படாமல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 99,800 கூட்டுத்தொகையான கடன் மீதி காணப்பட்டது. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சபை அதிகாரப் பிரதேசத்தில் மயான நிலங்களின் பாதுகாப்பு**

சபை அதிகாரப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட 24 மயான நிலங்கள் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 13 மயான நிலங்கள் தொடர்பாக நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 மயான நிலங்கள் தொடர்பாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண காணி ஆணையாளரிடம் கோரப்பட்டிருந்தும் 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 636 குடாயால, மாபோகொட, துத்திரிபிட்டிய 2 ஏக்கர் அளவிலான பொது மயான நிலத்தில் அத்துமீறி பயிர்ச்செய்கை இடம்பெறுகின்றமை மற்றும் 633 வேரவத்த, தெல்கஹ கந்த மயான நிலத்தில் ஒரு ஏக்கர் அளவான காணிப்பகுதி அத்துமீறி பிடிக்கப்பட்டிருந்தமை என்பவற்றுக்கான முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

**(அ) திக்லந்த நீர் செயற்திட்டம்**

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 21 வீடுகளுக்கு தண்ணீர் வழங்குவதற்காக ரூபா 6,604,411 தொகை செலவில் இந்த நீர் செயற்திட்டம் 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதி

சபைக்கு கையளிக்கப்பட்ட போதும், நிர்மாணிக்கப்பட்ட கிணற்று நீரில் பாதகமான பற்றீரியா இருந்தமையினால் நீர் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றமையால் இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

**(ஆ) றெமுண (90 ஏக்கர்) நீர் செயற்திட்டம்**

74 குடும்பங்களுக்கு நீர் வழங்கும் நோக்கில் ரூபா 17,800,877 தொகை செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நீர் செயற்திட்டத்தின் மூலம் நலன்களைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 52 மாத்திரம் ஆனமையால் இந்த செயற்திட்டமும் குறைவாக பயன்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்குள்ளாகியிருந்தது.

## 3.5 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமான டபள்கப் வண்டியொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்தமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக 04 பரிசோதனை சபைகள் மூலம் பரிசோதனை நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் விபத்திற்கான காரணம் மற்றம் அதற்குப் பொறுப்பாக இருந்தவர் கண்டறியப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் காவலாளர் ஒருவர் வாகனத்தின் சாரதியாக ஈடுபட்டிருந்த போது விபத்து ஏற்பட்டிருந்ததுடன் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட இயந்திரப் பொறியியலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,557,709 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் 2017 யூன் 22 ஆந் திகதி பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பெறுகைகள்

பெல்லபிட்டிய சிறுவர் விளையாட்டரங்கிற்காக ரூபா 1,060,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட Play Station என்ற பெயருடைய உபகரணத்தை வழங்குவதற்காக கூறுவிலை சமர்ப்பிக்கும் போது அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படக்கூடிய வயதெல்லை வருடம் 04 - 14 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உபகரணத்திற்காக வழங்கப்பட்ட உத்தரவாதச் சான்றிதழில் வயது எல்லை வருடம் 03 -12 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் 95 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையும், செலவினம் 513 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடல், குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டமை. |
| | (ii) | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்களின் பாதுகாப்பிற்காக போதியளவான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) | சொத்துக்கள் சரியான பிரகாரம் பயன்படுத்தப்படாமை |
| | (iii) | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டம் காணப்பட்டமை. |
| (இ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வரி அறவிடல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) | வரி மதிப்பீடு குறித்த காலத்தில் இடம்பெறாமை. |
| (ஈ) கொள்வனவு செய்தல் | | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுகள் இடம்பெறாமை |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) | வருமான மதிப்பீடு நடைமுறைக்குப் பொருந்தாமை. |